உ

ஓம்.

தத் ஸத்

SHIYALI

தேவாரநகரம்

சுத்த அத்வைதி அருட்கவி

# ஸ்ரீ விலக்ஷணாநந்த ஸ்வாமிகள்

அருளிச்செய்த

நால்வர் அருட்[illegible]யார்
அவர்களின் நினைவாக அன்பளிப்பு
அளிப்பவர்:
திருமதி சியாமளா அருணாசலம்
(1982) இஃது சீர்காழி.

முசிரி தாலுகா தோழூர்ப்பட்டி

கிராம முனிசீப் திருமலைரெட்டியார் அவர்களால்

---

திரிசிரபுரம் ஜெகம் அண்டு கோ., டாட்சன் பிரஸில்
பதிப்பிக்கப்பட்டது.

1918

ஓம்.

தத். ஸத்

# முகவுரை

---

அன்பர்காள்

தேவாரநகரம் சுத்த அத்வைதி அருட்கவி ஸ்ரீ விலக்ஷணானந்தஸ்வாமிகள் ஓர் நாள் முசிரி தாலுகாவைச்சார்ந்த குளக்குடிஎன்ற ஓர்நகருக்குச் சென்றிருந்தனர். அத்தருணம் அவ்வூர் கிராமமுனிசீப் எ நல்லப்பரெட்டியார் கிருஹத்திற் றங்கியிருந்தனர். அச்சமயம் நால்வர்பாததூளி என்ற ஓர் நூல் இயற்ற ஆரம்பித்து ஐந்து நிமிஷத்திற்குள் பதினாறு கவிகளையுந் தானே யெழுதியுள்ளார்

இங்ஙன்

ஓர் அன்பன்,

ஓம்.

தத். ஸத்.

# நால்வர் பாததூளி

சம்பந்தர்மாணிக்கர் சுந்தரனுமப்பரவர்
தம்பந்தந்தான்விலக்கித் தற்பரமேயானார்க
ளெம்பந்தந்தீராதோ வீசனடிநால்வருக்கு
மும்புந்தமுஞ்சாதி யுட்டூளியாவேனே. (1)

ஆவேனானல்வருக்கு மாருக்குமாட்டேனா
னேவேபிறப்பிறப்பாய் நொந்தவெனை நுண்ணறிவைப்
பாவாற்பதிகாட்டிப் பக்குவமுங்காட்டிடுவா
யீவாயெனக்கின்று மென்னல்வர்தூளியதே. (2)

முத்திநிலைபெறவேண்டி முதல்வரதிகாரரவர்
பத்தியுறுநால்வருறை பாடலதேபோதுமது
சத்தியமேசத்தியமே சங்கரனுக்காளாவர்
நித்தியமுநால்வரடி நேராதுநேருவமே. (3)

நேராம்வழியெதுவோ நேர்ந்தவழியேதென்று
பாராமனிதரெலாம் பக்குவமாய்வாருங்கள்
தீராதசங்கரனைத் தீர்ந்தறியநால்வருறை
பேராகுந்தேவாரம் பேர்பெற்றவேதமதே. (4)

அறியாமல்மானுடர்க ளகச்சமயம்புறச்சமயம்
பிறிவானவதுதெரியாப் பேதையராய்ப்போனார்க
ணெறியானநால்வருறை நிச்சயத்தைப் பாராத
குறியர்ளர்குடிகேடர் கோதற்றவேதமதே. (5)

அடியார்களடிபேணி யரகரனைத்தினம்போற்றிப்
படிமீதுபாடாமற் பாவியனுயானேனே
நொடிநேரமுனைமறந்து நூலுணர்ந்துநின்றேனே
கடிமணமாஞ்சம்பந்தா கானினதுதூளியனே. (6)

தேவாரந்தெரியாத தெளிவில்லாமானுடரை
யோவாமலேன்படைத்தா யுன்னைவுக்கெட்டாதோ
காவாயென்னையகற்றிக் கற்பகமாநால்வர்களே
தேவேயென்றெள்ளமுதே தேர்ந்தவர்கணால்வர்களே.

நாலாகுந்தத்துவத்தை நான்கடப்பதென்றென்று
வாலாமரத்தடியி லரனன்றுகாட்டியதை
வேலாயவதரித்த விண்ணவர்களுல்வர்களே
காலானின்றாசியனே காட்டாயடியேற்கே. (8)

ஐயோவிப்பாரதர்க ளறிவிழுந்துமதைநாடி
மெய்யாகுந்தேவாரம் விளம்பியிடுநால்வருக்கு
மெய்யடியாராகாமல் மேல்விழுந்துமாயையிலே
பொய்யாகப்போனார்கள் போகாமலாக்கிடுவாய். (9)

மாயாவாதக்குழியில் மாட்டிநிதமாளாமற்
றோயாவருளெனக்குத் தோன்றிடவுஞ்செய்யாயோ
மாயோனின்மாயோனே மாறனக்குமாறவனே
நீயேயெனக்குறுதி நிற்கின்றநால்வர்களே. (10)

என்னேகிடைத்ததிது யார்செய்தமாதவமோ
பொன்னேபோற்றேவாரம் பூணுதகண்டகரை
யென்னேபடைத்தானென் னீசானநாயகனார்
தன்னேருமில்லாத தானானநால்வர்களே. (11)

நீங்களுரைதேவார நிண்ணயமேநிண்ணயமாய்ப்
பாங்கிலுறைசம்பந்தா பக்குவநின்பக்குவமாஞ்
சாங்கிய நூல்சொன்னாலுஞ் சற்றேனுந்தாளேனு
னேங்கியதோர்நால்வர்களே யும்பாதநூளியனே. ( )

அத்துவிதம்வேண்டுமென வாகாதகாலமெலாம்
பொய்த்துவிதத்தாலுளன்றேன் போதமிகுநால்வர்களே
சத்தியமேதென்றாய்ந்து சங்கரனேசத்தியமென்
றெத்தினத்துநானறிய விதுசெய்வீர்நால்வர்களே. ( )

என்னென்னபேருதவி யென்றனக்குச்செய்தீர்க
ளன்னன்னவாகமத்தை யறியாதவென்றனக்குச்
சொன்னமுறைத்தேவாரஞ் சோதிநிலைகாணுதற்கு
மன்னிலையையடியேற்கு மறிவுவரச்செய்வீரே. (14)

இன்றெழுதும்பாசுரங்க ளியானெழுதவில்லையிது
மன்றாணடமாடுமவன் மனமதிலேதானினைத்துச்
சென்றடையுங்கதிகாணச் சேர்பவர்க்குநால்வர்களே
நன்றிதெனநாட்டியிட நன்றாகநாட்டினனே. (15)

## வாழி

வாழிநால்வர்கள் வந்தருள்பூமகள்
வாழிதேவர்கள் வந்திடுஞ்சங்கரன்
வாழிநாமகள் வகையடியார்களும்
வாழிவாழிய வாழியவாழியே. (16)

ஓம். தத். ஸத்.